**1990 சுவசரிய மன்றம் - 2023**

---------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

1990 சுவசரிய மன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகழ்விரிவான வருமானக்கூற்று, திரண்ட நிதியத்தின் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமா்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசாா் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு பரிச்சயங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு பரிச்சயங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சுவசரிய மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீா்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்படுவதுடன் முகாமைத்துவமானது சுவசரிய மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடா்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சுவசரிய மன்றம் தொடா்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சுவஸரிய மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சுவஸரிய மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- தெரிவித்துக் கொண்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சுவஸரிய மன்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சுவஸரிய மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சுவஸரிய மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சுவஸரிய மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.5.1 பெற வேண்டிய தொகை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை** |
| --- | --- | --- |
| 2018 ஏப்ரல் 24 திகதி சுகாதார அமைச்சு மற்றும் GVK EMRI Lanka (Private) Ltd. நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு | இந்த தொகையினை பெற்றுக்கொள்வதற்காக கடந்த பல வருட காலமாக சுகாதார அமைச்சின் மூலம் திறைசேரிக்கு கோரிக்கை | திறைசேரியுடன் கலந்துரையாடி இத் தொகை தொடர்பாக உறுதியான தீர்மானமொன்று பெற்றுக்கொண்டு அதன்படி நிதிக் கூற்றுக்களில் |

| | | |
|---|---|---|
| உடன்படிக்கை மற்றும் 2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவஸரிய மன்றச் சட்டத்தின் பிரிவு 26(இ) இன் பிரகாரம், சுவஸரிய மன்றத்தின் செயற்பாட்டு அலுவல்களுக்காக செலவிடப்படும் மீண்டுவரும் செலவுகள் அரசாங்கத்தினால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஜனவரி 01 திகதி அளவில் காணப்பட்ட ரூபா 330,091,526 இற்கான தொகை மீளாய்வாண்டின் போதும் திறைசேரியினால் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு தேவையான அனைத்து கோப்புக்கள் மற்றும் ஆவணங்கள் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், இதற்காக திறைசேரியினால் எதுவித பதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் கலந்துரையாடுவதற்கு வரும் படி வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டு, அந்த கலந்துரையாடலும் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. அவ் விடயங்கள் தவிர வேறு பதிலேதும் திறைசேரியினால் சமர்ப்பித்திருக்கவில்லை என சுட்டிக்காட்டுகின்றேன். | தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவஸரிய மன்றச் சட்டம் | | | |
| (i) சட்டத்தின் பிரிவு 12(1) | பணிப்பாளர் சபைக் கூட்டங்கள், குறைந்தளவு மாதத்திற்கு ஒரு முறையேனும் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தினால் மீளாய்வாண்டின் போது 06 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | தற்போதைய பணிப்பாளர் சபையின் இடையறாத முயற்சியின் காரணமாக பல சவால்களுக்கு மத்தியிலும் 1990 சுவஸரிய மன்றம் தடைகள் இன்றி நடாத்தப்பட்டு வருகின்றன என அறிவிக்கின்றேன். | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்காமை தொடர்பான காரணத்தை கண்டறிய வேண்டியிருந்ததுடன், எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) சட்டத்தின் பிரிவுகள் 18(5) மற்றும் 25(1) | மன்றத்தினால் நிதியத்திலிருந்து பணக் கொடுப்பனவு தொடர்பாக மற்றும் விதிகள் தயாரிக்கப்பட வேண்டிய 05 பிரதான விடயங்களில் எந்தவொரு விடயம் தொடர்பாக விதிகள் | “சட்டத்தின் பிரிவு 18(5) பந்தியில் காட்டப்பட்டுள்ளது நிதியத்திலிருந்து பணக்கொடுப்பனவு தொடர்பாக விதிகள் தயாரிக்கப்பட வேண்டும் என” இதன்படி தற்போது | சட்டத்தின் கீழ் விதிகள் தயாரிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக விதிகள் தயாரிப்பதன் தாமதத்திற்காக காரணத்தை கண்டறிந்து விரைவாக விதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | தயாரித்திருக்கவில்லை. | நிதி விதிகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மேலதிகமாக ஆய்வு செய்யப்படுகின்றது. அந்த நிதி விதிகள் தொடர்பாக விரைவாக அரச தொழில் முயற்சிகளுக்கான நிறுவனம் சார் வழிகாட்டல் கோவையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஆ) 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அரச தொழில்களுக்கான செயற்பாட்டுக் கைநூல் | | | |
| (i) செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 7.5 | மேற்கூறிய கைநூலின் பந்தி 7.4 இன் பிரகாரம் அறிக்கைகள் மாதாந்தம் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அது தொடர்பாக மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் உரியவாறு அமைச்சுக்கு மற்றும் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றத்தினால் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | அனைத்து விடயங்களும் எல்லா பணிப்பாளர் சபைக் கூட்டங்களிலும் கலந்துரையாடுவதற்கு மற்றும் மீளாய்வாய்விற்கு உள்ளாக்கப்பட்டு அது தொடர்பாக பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது எனவும், எவ்வாறாயினும், அவை மாதாந்த மற்றும் காலாண்டு ரீதியாக அனுப்பப்படாத போதிலும், இடையிடையே அமைச்சுக்கு மற்றும் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | வழிகாட்டலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணத்தை கண்டறிய வேண்டிதுடன், இவ்வாறான நிலைமைகள் எதிர் காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 6.7 | நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியங்கள் தொடர்பாக வருடாந்த சொத்துக்கள் மெய்மையாய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தில் காணப்படும் | மன்றத்தில் காணப்படும் பதவியணி பற்றாக்குறை நிலைமையின் காரணமாக நோயாளர் காவு வண்டிகளில் காணப்படும் சொத்துக்கள் அனைத்து ஆண்டுகளிலும் மெய்மையாயப்படாவிடினும், | வழிகாட்டலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணத்தை கண்டறிந்து அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் அவ்வாறான |

| | | |
|---|---|---|
| நிலையான சொத்து விடயங்கள் 07 இல் 05 இற்கு அவ்வாறான சொத்துக்கள் மெய்மையாதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் போது மேல் மாகாணத்தில் காணப்பட்ட அனைத்து நோய் காவு வண்டிகளிலும் அனைத்துச் சொத்துக்களும் மெய்மையாயப்பட்டதெனவும், அதே போல் ஏனைய மாகாணங்களிலும் சொத்துக்கள் மெய்மையாய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | நிலைமையொன்று எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 269,930,094 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 293,067,249 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளின் ரூபா 23,137,155 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு மன்றத்தின் வெளிநாட்டு நாணயக் கணக்கில் பரிமாற்ற பெறுமதி குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்த போதிலும், அதற்கு நேர்மாறாக மன்றத்திற்கு கிடைத்திருந்த அன்பளிப்புக்கள் அதிகரித்திருந்தமையால் ஒட்டுமொத்த பின்னடைவின் பெறுமதி குறைவடைந்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 18 ஆம் இலக்க சுவஸரிய மன்றச் சட்டத்தின் பிரிவு 4(இ) பிரகாரம் வெகுமதி அல்லது பரிசுகள் பெற்றுக்கொள்வதற்காக மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. திறைசேரிச் செயலாளரின் இலக்கம் FP/01/01/05/09-2022 மற்றும் 2022 மார்ச் 30 திகதிய மன்றத்தின் தலைவரை விழித்து அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மன்றத்திற்கு கிடைக்கும் நன்கொடைகள் / மானியங்கள் கணக்கீடு செய்ய வேண்டியது தொடர்பான அரச கணக்குத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருந்த இலக்கம் SA/MAA/GRG/01 மற்றும் 2022 ஜூலை 08 திகதிய வழிகாட்டலின் | சில நன்கொடையாளிடம் நாட்டின் நிலைமை மற்றும் அப்போதைய அரச நிதிப் பிரிவின் மீது போதியளவு நன்பிக்கையொன்று காணப்படவில்லை எனவும், இதன் காரணமாக அவர்கள் திறைசேரிக்கு நேரடியாக பணம் செலுத்துவதற்கு புறக்கணித்ததுடன் அதன் காரணமாக அவர்கள் தமது காசோலைகளை நேரடியாக மன்றத்திற்கு எழுதியிருந்ததுடன், சிறிய அளவிலான நன்கொடைகள் இந்த செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மன்றத்திற்கு கிடைத்திருந்ததெனவும், அதன் காரணமாக அவை நேரடியாக நிதியத்திற்கு பெற்றுக்கொண்டு வங்கியில் இடப்பட்டதுடன், உரிய முறையில் கணக்குகள் பதிவுகள் செய்யப்பட்டதுடன், தற்போது | அரச கணக்குத் திணைக்களத்தின் அறிவுரைகளின் படி நடவடிக்கைகள் எடுக்காமைக்கான காரணங்களை கண்டிறிந்து அதன்படி, தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் இவ்வாறான நிலைமைகள் எதிர் காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் கிடைக்கக் கூடிய நன்கொடைகள் முதலில் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் உத்தியோகபூர்வ கணக்கிற்கு மாற்றுவதற்காக திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியதுடன், பின்னர் தேசிய பாதீட்டின் திணைக்களத்தின் மூலம் அதற்கு தேவையான ஏற்பாடுகள் பெற்றுக்கொண்ட பின்னர் உரிய கட்டுநிதிகள் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடம் விண்ணப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2023 ஆண்டின் போது கிடைத்திருந்த உதவி நிதி ரூபா 38,198,485 தொகை மேற்கூறிய வழிகாட்டலின் பிரகாரம் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டுள்ள நிதி விதிகளில் இந்த நன்கொடைக் கணக்கு பதியும் ஏற்பாடுகள் உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த நிதி விதிகளுக்கு அரச தொழில் திணைக்களத்திள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் போது இது தொடர்பாக கலந்துரையாடி தீர்மானமொன்று மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,992 தொகை எனினும் அத் திகதியில் உள்ளவாறான பதவியணி 1,189 தொகையாக இருந்தமையால் பதவியணிப் பற்றாக்குறை 803 ஆக இருந்ததுடன், அவற்றில் 363 பேர் நோயாளர் காவு வண்டிச் சாரதிகள் ஆகும். | 2021 ஆண்டு முதல் ஆட்சேர்ப்புக்காக திறைசேரியினால் அங்கீகாரம் வழங்கப்படாமையும், ஆட்சேர்ப்புக்காக நேர்முகப் பரீட்சைகள் நடாத்துவதற்கு நாட்டின் முறையான சூழலொன்று காணப்படாமையால் இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் இறுதியாக 2023.10.04 திகதி முகாமைத்துவத் திணைக்களத்தின் கடிதமொன்றின் மூலம் 283 அவசர மருத்துவ தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் 174 நோயாளர்காவு வண்டி வழிகாட்டிகள் ஆட்சேர்ப்பதற்கு இறுதி அங்கீகாரம் கிடைத்துள்ளதெனவும், அதன் பின்னர், நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | அத்தியவசிய பதவியணிக்காக ஆட்சேர்ப்பதற்கும் அத்தியவசியம் அல்லாத பதவிகள் இருப்பின் அவற்றை கீழ்படுத்தி பதவியணி திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சுவசரிய மன்றப் பதவியணிக்குரிய சம்பளக் கட்டமைப்பு 2019 ஆகஸ்ட் 01 திகதி முதல் | பதவியணியினர் விலகிச் செல்லல் மேற்கொள்ளப்படுவதுடன், அவர்களுக்காக சம்பள அதிகரிப்பு | பதவியணி ஆட்சேர்ப்புக்காக பொருத்தமான சம்பள அதிகரிப்பு கட்டமைப்பொன்று |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த சம்பள அதிகரிப்பு கட்டமைப்பொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | அல்லது சம்பள உயர்வொன்று இதுவரை திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், நீண்ட நாளாக அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நீண்ட காலமாக வழங்கப்பட்டிருந்தது ஒரே சம்பள அளவே ஆகும். அரச நிறுவனங்களில் எதிலும் அவ்வாறு நடைபெறாததுடன், அதன் காரணமாக ஆட்சேர்க்கப்படும் பதவியணியினர் குறுகிய காலத்தில் விலகிச் செல்வதுடன், இதற்காக பல சந்தர்ப்பங்களில் திறைச்சேரியிடம் விண்ணப்பித்திருந்த போதிலும் இதுவரை அதற்கான பதிலொன்று கிடைத்திருக்கவில்லை எனவும், இதன் காரணமாக தற்போது ஆட்சேர்ப்பதற்கு தகைமையுடைய உத்தியோகத்தர்கள் வந்த போதிலும், ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் விலகிச் செல்லல் மற்றும் வெளிநாடுகளுக்குச் செல்லல் மேற்கொள்ளப்படுகின்றன என. | அங்கீகரித்து செயற்படுத்த வேண்டும். |
| (இ) | உயர் முகாமைத்துவ பதவியொன்றான நிதி தலைமை அதிகாரி (Head of Finance) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது. அந்த நேர்முகப் பரீட்சைக் குழுவின் பரிந்துரையின் மீது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்காத நிதி ஆலோசகர் என உத்தியோகத்தர் ஒருவர் 06 மாத காலத்திற்காக 2021 செப்தம்பர் 02 திகதி ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. நியமன நிபந்தனைகளின் பிரகாரம் மேலும் 06 மாதங்களுக்கு ஒப்பந்தக் காலத்தை நீடிக்கக் கூடியதாக இருந்த போதிலும் 2024 ஏப்ரல் 19 திகதி வரை அவரின் ஒப்பந்தக் காலத்தை மேலும் 25 மாதங்களினால் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், அவரின் பிரதான கடமை என கணிக்கப்படும் மன்றத்திற்கு | குறிப்பிட்ட நிதி ஆலோசகர் பதவிக்கு நியமனம் செய்வதற்கு நேரிட்டது அந்த சந்தர்ப்பத்தில் நிதி தலைமை அதிகாரி பதவிக்காக தகைமையுடைய நபரொருவர் ஆட்சேர்ப்பதற்கு முடியாமல் போனதன் காரணமாகவும் 2023 ஆண்டில் அப்போதிருந்த நிதி முகாமைத்துவ உத்தியோகத்தர் விலகிச் சென்ற காரணத்தினால் இந்த நிலைமை மேலும் உக்கிரமடைந்திருந்தது எனவும், நிதி ஆலோசகர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரின் ஒப்பந்த காலம் 2024 ஆண்டில் ஏப்ரல் மாதம் முடிவடையவுள்ளதுடன், 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளின் அவதானிப்புக்களின் அடிப்படையில் அந்த உத்தியோத்தரின் சேவையை முடிவுறுத்தும் படி மன்றத்தினை கோறியிருந்ததெனவும், எனினும், அந்த உத்தயோகத்தர் பதவியிருந்து விலகிச் சென்றால் மன்றத்திற்காக | அனைத்து நியமனங்களும் முறையான அங்கீகாரத்தின் கீழ் மாத்திரம் மேற்கொள்வதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

அத்தியவசியமான நிதிப் பிரமாணக் கோவையொன்று தயாரிக்கும் அலுவல்கள் கணக்காய்வுத் திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு புறம்பாக நிதி ஆலோசகர் பதவியொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட் சேர்ப்பதற்கும் உடன்படிக்கையின் பிரகாரம் அவரின் சேவையை முடியுறுத்துவதற்கும் மூன்று வருடங்களுக்கு மேலான காலம் வெற்றிடமாக காணப்படும் நிதி தலமை அதிகாரியொருவர் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்வதற்கு 2024 மார்ச் 15 திகதி அளவிலும் நடவடிக்கை எடுக்காமை சிக்கல் தன்மையாக காணப்படுகின்றது.

தேவையான நிதி ஆலோசனை அலுவல்களுக்காக வெற்றிடமொன்று ஏற்படுவதுடன், அது மன்றத்திற்கு பாரிய நட்டமொன்று ஏற்படுவதுடன், நிதிப் பிரமாணக் கோவையின் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதற்கு முடியாது எனவும், அந்த உத்தயோகத்தரினால் குறிப்பிட்ட திகதியில் பூர்த்தி செய்து மன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அதன் தொடர் நடவடிக்கைகள் அரச தொழில் திணைக்களத்தின் இணக்கத்தின் மீது மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும்.